சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **08 / 2016**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.2**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி. A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **07.08.2025**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : முருகேசன் | கிராமம் : |
| த/பெ : | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் வெள்ளாலப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான டாரஸ் லாரியை TN 47 S 6463 என்ற லாரியை குளித்தலை சுங்ககேட்டில் இருந்து தோகைமலை நோக்கி ஓட்டிச்சென்றேன். இறந்துபோன காத்தமுத்து என்பவர் இருசக்கர வாகனத்தில் தென்புறம் இருந்து வடபுறம் நோக்கி சாலையின் வலதுபுறம் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். நான் ஓட்டிச்சென்ற லாரியின் இடது புற பின் சக்கரத்தில் மோட்டார் சைக்கிள் மோதி மேற்படி விபத்து நடந்தது. காத்தமுத்து சாலையின் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்றதாகவும், நான் இருசக்கர வாகனத்தின் பின்புறம் மோதி சாலை விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள தவறு. யாருடைய கவனக்குறைவால் விபத்தை நடந்தது என்றால் இறந்து போன காத்தமுத்துவின் கவனக்குறைவால் நடைபெற்றது.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கில் போலீசார் என்மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரணைக்கு பின்னர் இறுதி அறிக்கையும் என்மீது தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இறுதி அறிக்கையிலும், முதல் தகவல் அறிக்கையிலும் இறந்துபோன காத்தமுத்துவின் மீது நான் ஓட்டிச்சென்ற லாரி பின்னால் மோதியது என்று சொன்னால் தவறு. மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கக்கூடாது என்பதற்காக உண்மையை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்மீது போலீசார் தவறாக வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்பதை ரத்து செய்ய நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம் /-(ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.